**வாக்குமூலம்**
**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**
**O.S.No.175/2024**
**வழக்கு சாட்சி P.W.2**
**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திரு.K.கார்த்திக் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : செல்லத்துரை | தொழில் | : விவசாயம் மற்றும் காய்கறி வியாபாரம் |
| தகப்பனார் பெயர் | : சண்முகம் | கணவர் பெயர் | : ---- |
| கிராமம் | : இடையகோட்டை | வயது | : சுமார் 42 |
| தாலுக்கா | : ஒட்டன்சத்திரம் | நாள் | : 14.07.2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

பிரதிவாதி தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை

நீதிமன்றத்தில் என்னை சாட்சியம் அளிக்க யார் என்னை அழைத்தார் என்றால் ? தங்கவேல் என்பவர் அழைத்தார். என்ன சொல்லி அழைத்து வந்தார் என்றால் ? தனலெட்சுமி என்பவருக்கு பணம் வட்டிக்கு கொடுத்து இருந்தது வரததால் நான் வழக்கு தொடர்ந்துள்ளதாகவும், பிராமிசரி நோட்டை நான் எழுதியால் என்னை சாட்சியம் அளிக்க தங்கவேல் அழைத்தார். தங்கவேல் என்பவரை எனக்கு எவ்வளவு நாட்களாக தெரியும் என்றால் ? தனலெட்சுமி என்பவர் தங்கவேல் என்பவரிடம் பணம் வாங்க என்னை அழைத்து சென்றார். அப்போது இருந்து தான் தங்கவேல் என்பவரை எனக்கு தெரியும். தங்கேவல் என்பவரது வீடு எங்குள்ளது என்றால் ? ஒட்டன்சத்திரம், திருவள்ளுவர் சாலையில் உள்ளது. அங்கு வைத்து தான் தாவா கடனுறுதிசீட்டு எழுதப்பட்டதா என்றால் ? ஆமாம். நான் தான் தாவா கடனுறுதிசீட்டை எழுதினேனா என்றால் ? ஆமாம். நான் தாக்கல் செய்துள்ள முதன்மை சாட்சிய நிரூபண பிரமாண பத்திரிக்கையில், தாவா கடனுறுதிசீட்டு எழுதும் போது வாதி தங்கவேல் உடன் இருந்ததாக எந்த இடத்திலும் சொல்லவில்லை என்றால் ? சரிதான். அந்த இடத்தில் தாவா கடனுறுதிசீட்டை எழுதியபோது வாதி தங்கவேல் அந்த இடத்தில் இல்லாத காரணத்தினால் தான் நான் தாக்கல் செய்துள்ள முதன்மை

சாட்சிய நிரூபண பிரமாண பத்திரிக்கையில் சொல்லவில்லை என்றால் ? சரியல்ல. அந்த இடத்தில் மற்றொரு சாட்சியான பழனியப்பகவுண்டர் மகன் ரஞ்சிதவேல், நான், தனலெட்சுமி, வாதி தங்கவேல் அந்த இடத்தில் இருந்தோம். வாதி தங்கவேல் அந்த இடத்தில் இல்லை என்றாலும், வழக்கிற்காக வேண்டி பொய்யாக சொல்கிறேன் என்றாலும் ? சரியல்ல. சாட்சி ரஞ்சிதவேல் என்பவருக்கு வயது என்ன இருக்கும் என்றால் ? சுமார் 65 வயது இருக்கும். தனலெட்சுமி பிரதிவாதியை எனக்கு எத்தனை வருடமாக தெரியும் என்றால் ? 7, 8 ஆண்டுகாலமாக தெரியும். எதன் அடிப்படையில் சொல்கிறேன் என்றால் ? தனலெட்சுமியின் கணவர் திருவள்ளுவர் சாலையில் மெடிக்கல் கடை வைத்துள்ளார். அந்த மெடிக்கல் கடையில் மருந்து மாத்திரைகள் வாங்க சென்ற போது எனக்கு பழக்கம். நான் எழுதியதாக சொல்லப்படும் தாவா கடனுறுதிசீட்டில் ரெவன்யூ ஸ்டாம்பின் மீது உள்ள கையொப்பம் ஆங்கிலத்தில் உள்ளதா அல்லது தமிழில் போடப்பட்டுள்ளதா என்றால் ? தமிழில்தான் போடப்பட்டுள்ளது. தனலெட்சுமி என்ற ஒரு கையொப்பம் உள்ளதா அல்லது ரெவன்யூ ஸ்டாம்பிற்கு கீழ் மற்றொரு கையொப்பம் உள்ளதா என்றால் ? ரெவன்யூ ஸ்டாம்பில் ஒரு கையொப்பம் தான் போடப்பட்டுள்ளது. கைரேகை வைக்கப்பட்டுள்ளதா என்றால் ? இல்லை. தாவா கடனுறுதிசீட்டு எழுதும் போது பிரதிவாதியின் கணவர் உடன் இல்லை என்றால் ? உடன் இல்லை. தாவா கடனுறுதிசீட்டு தங்கவேல் என்பவர் என்னை கேட்டுக் கொண்டதற்கிணங்க என்னால் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றாலும், தாவா கடனுறுதிசீட்டில் ரெவன்யூ ஸ்டாம்பின் மீது உள்ள கையொப்பம் பிரதிவாதியுடையது அல்ல என்றாலும் ? எனது முன்னிலையில்ை தான் பிரதிவாதி கையொப்பம் செய்தார். வாதி தங்கவேல் கேட்டுக்கொண்டதற்கிணங்க உண்மையை மறைத்து வாதிக்கு ஆதரவாக பொயயாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் ? சரியல்ல.

C JAYAPPRAKASH
Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2026.07.14 15:48:39 +0530

சார்பு நீதிபதி
ஒட்டன்சத்திரம்

**வாக்குமூலம்**
**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**
**O.S.No.175/2024**
**வழக்கு சாட்சி P.W.1**
**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திரு.K.கார்த்திக் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : தங்கவேல் | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார் பெயர் | : சென்னியப்பன் | கணவர் பெயர் | : ---- |
| கிராமம் | : புலியூர்நத்தம் | வயது | : சுமார் 51 |
| தாலுக்கா | : ஒட்டன்சத்திரம் | நாள் | : 14.07.2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

பிரதிவாதி தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை

நான் என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் ? பணம் வாங்கி கொண்டு திரும்ப தராததால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். யார் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் ? தனலெட்சுமி என்பவர் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தனலெட்சுமியின் கணவர் பெயர் தெரியுமா என்றால் ? கடற்கரை. எனக்கும், பிரதிவாதிக்கும் எவ்வாறு பழக்கவழக்கம் என்பவதை நான் தாக்கல் செய்துள்ள வழக்குரை சங்கதிகள் மற்றும் முதன்மை சாட்சியத்தில் சொல்லியுள்ளேனா என்றால் ? இல்லை. எனக்கும் பிரதிவாதிக்கும் எந்தவித பழக்கவழக்கம் இல்லாத காரணத்தினால் தான் நான் எவ்வாறு பழக்கம் என்பதை குறிப்பிட்டு வழக்குரை சங்கதிகள் மற்றும் முதன்மை சாட்சியத்தில் சொல்லவில்லை என்றால் ? சரியல்ல. இவ்வழக்கின் பிரதிவாதி நான் தாக்கல் செய்துள்ள வழக்கிற்கு எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ள விபரம் எனக்கு தெரியும் என்றால் ? சரிதான். பிரதிவாதி என்ன படித்துள்ளார் என்றால் ? எனக்கு தெரியாது. இவ்வழக்கில் சாட்சிகளாக உள்ள செல்லத்துரை, ரஞ்சிதவேல் ஆகியோர்களை எப்படி தெரியும் என்றால் ? ரஞ்சிதவேல் என்னுடைய உறவினர். செல்லத்துரையை எனக்கு தெரியாது. செல்லத்துரைக்கும் எனக்கும் எந்த

சம்மந்தமும் கிடையாது என்றால் ? பிரதிவாதி என்னிடம் பணம் வாங்கும் வரை அவரை தெரியாது. செல்லத்துரை என்பவரை நான் அழைக்கவில்லை என்றால்? சரிதான். இவ்வழக்கினை நான் தாக்கல் செய்வதற்கு முன்பு பிரதிவாதிக்கு எவ்வித அறிவிப்பும் அனுப்பவில்லை என்றால் ? சரியல்ல. அறிவிப்பு அனுப்பியுள்ளேன். எந்த தேதியில் அறிவிப்பினை அனுப்பினேன் என்றால் ? வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு அறிவிப்பு அனுப்பினேன். அறிவிப்பினை பிரதிவாதி பெற்றுக் கொண்டாரா என்றால் ? ஆமாம், பெற்றுக் கொண்டார். நான் அனுப்பிய அறிவிப்பையும், பிரதிவாதி அறிவிப்பை பெற்றுக் கொண்டதற்கான ஒப்புகை அட்டையையும் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ? வழக்குரைஞர் வழக்கில் தாக்கல் செய்திருப்பார் என்று நினைக்கிறேன். பிரதிவாதி கையெழுத்து செய்ததாக சொல்லியுள்ள வா.சா.ஆ.1 கடனுறுதிசீட்டில் பிரதிவாதி செய்த கையொப்பத்தையும், பிரதிவாதி கையொப்பம் செய்த மற்ற பதிவு செய்யப்பட்ட கிரையம் போன்ற ஆவணங்களில் கண்டுள்ள கையொப்பத்தை பரிசோதனைக்கு அனுப்ப தயாராக உள்ளேனா என்றால் ? தயராக உள்ளேன். தாவா கடனுறுதிசீட்டில் உள்ள கையொப்பம் பிரதிவாதியுடைய கையொப்பம் அல்ல என்றால் ? தவறு. தாவா கடனுறுதிசீட்டில் உள்ள கையொப்பம் பிரதிவாதியுடையது என்பதை நிரூபிக்கும் பொறுப்பு என்னுடையது என்றால் ? சாட்சிகள் எனது வசம் உள்ளது. நான் நிரூபிக்க தயாராக உள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள தாவா கடனுறுதிசீட்டில் கைரேகை எதுவும் பதியவில்லை என்றால் ? சரிதான். சாட்சி ரஞ்சிதவேல் என்பவரை நான் தான் அழைத்து சென்றேனா என்றால் ? இல்லை. பிரதிவாதி தான் அழைத்து வந்தார். தாவா கடனுறுதிசீட்டை பூர்த்தி செய்தது யார் என்றால் ? செல்லத்துரை. தாவா கடனுறுதிசீட்டை பூர்த்தி செய்யும் போது ஸ்டாம்பின் மீது கையெழுத்து இருந்ததா என்றால் ? இல்லை. பூர்த்தி செய்த பிறகு தான் கையொப்பம் செய்தார். பிரதிவாதிக்கு தமிழில் கையொப்பம் செய்யும் பழக்கம் இல்லை என்றாலும், பிரதிவாதி பட்டப்படிப்பு படித்துள்ளார் என்றாலும், பிரதிவாதி ஆங்கிலத்தில்

மட்டும் தான் கையொப்பம் செய்வார் என்றாலும் ? பிரதிவாதி தமிழில் தான் கையொப்பம் செய்வார். நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் ? விவசாயம். விவசாயத்தை தவிர வேறு எந்த தொழிலும் செய்யவில்லை என்றால்? சரிதான். விவசாயத்தில் இருந்து வருமானம் வருவதற்கு எந்த ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் ? ஆவணங்கள் எனது வசம் இல்லை. என்னுடைய பெயரில் எத்தனை ஏக்கர் நிலம் உள்ளது என்றால் ? எனது பெயரில் இல்லை. எனது தகப்பனார் பெயரில் நிலம் உள்ளது. எனது பெற்றோர்கள் எங்குள்ளார்கள் என்றால் ? இறந்துவிட்டார்கள். உடன்பிறந்தவர்கள் உள்ளார்களா என்றால் ? ஒரு மூத்த சகோதரி உள்ளார். 2023ம் ஆண்டு எனது ஆண்டு வருமானம் எவ்வளவு இருக்கும் என்றால் ? சுமார் ரூ.4 இலட்சம் இருக்கும். எனக்கு எத்தனை குழந்தைகள் என்றாலும், என்ன படித்து வருகிறார்கள் என்றாலும் ? மூத்த மகள் வேலைக்கு சென்று வருகிறார். இளைய மகள் B.Sc படித்து கொண்டு இருக்கிறார். குழந்தைகளின் படிப்பு செலவு, மருத்துவ செலவு, துணிகள் எடுப்பது, குடும்ப செலவுகள் அனைத்தும் ஆண்டிற்கு ரூ.3 இலட்சம் செலவு ஏற்படுமா என்றால் ? இல்லை. ரூ.1,00,000 செலவு ஏற்படும். நான் சொல்வது தவறு என்றாலும், தொகை ரூ.3 இலட்சம் செலவு செய்தேன் என்றாலும் வழக்கிற்காக வேண்டி ரூ.1 இலட்சம் செலவு செய்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் ? சரியல்ல. தாவா கடனுறுதிசீட்டு தயார் செய்வதற்கு முன்பு பிரதிவாதியுடன் ஏதாவது பேச்சுவார்த்தையோ வரவு செலவோ இல்லை என்றால் ? சரியல்ல. பிரதிவாதி இடையில் பணம் கடன் வாங்குவார் மற்றும் பணம் கொடுப்பார். அதற்கான ஆதரவுகள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ? இல்லை. எனக்கும் பிரதிவாதிக்கும் வரவு செலவு ஏற்கனவே இருந்தது என்ற விபரத்தை நான் தாக்கல் செய்துள்ள வழக்குரை சங்கதிகள் மற்றும் முதன்மை சாட்சியத்தில் சொல்லியுள்ளேனா என்றால் ? இல்லை. தொகையினை பலமுறை ஆட்கள் வழியாகவும், நேரிலும் திரும்பி கேட்டதாகவும், பிரதிவாதி தொகையினை

செலுத்துவதாக சொல்லி காலம் தாழ்த்திவிட்டதாக நான் சொல்வது தவறு என்றால் ? சரியல்ல. நான் பிரதிவாதியிடம் தொகையினை எங்கு வைத்து, யார் மூலம் எந்த தேதியில் கேட்டேன் என்று குறிப்பிட்டு வழக்குரை சங்கதிகள் மற்றும் முதன்மை சாட்சியத்தில் சொல்லியுள்ளேனா என்றால் ? இல்லை. நான் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள தாவா கடனுறுதிசீட்டான வா.சா.ஆ–1 ஆவணம் பிரதிவாதியால் எனக்கு எழுதிக் கொடுக்கப்பட்ட ஆவணம் அல்ல என்றால் ? சரியல்ல. வழக்கிற்காக என்னால் வா.சா.ஆ.1 ஆவணம் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் ? சரியல்ல. பாரத ரிசர்வ் வங்கியின் வழிகாட்டுதலுக்கிணங்க ஒரு நபர் தொகை ரூ.2 இலட்சத்திற்கு மேல் ரொக்கம் பணபரிவர்த்தனை செய்யும் போது வங்கி கணக்கு வழியாக தான் பண பரிவர்த்தனை செய்ய வேண்டும் என்று வழிகாட்டு நெறிமுறைகள் உள்ளது என்றால் ? அது பற்றி எனக்கு தெரியாது. எனக்கு மேற்படி விதிமுறைகள் தெரியும் என்றாலும், அவ்வாறு தெரிந்து கொண்டதை தெரியும் என்று சொன்னால் வங்கி வழியாக அனுப்பவில்லை என்ற காரணத்தினால் நான் பாதிக்கப்படுவேன் என்பதால் விதிமுறைகள் பற்றி எனக்கு தெரியாது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் ? சரியல்ல. ஒரு நபர் சில்லறை கடன் தீர்க்கவோ அல்லது குடும்ப செலவிற்காக வேண்டி தொகை ரூ.4,50,000 கடன் பெறவேண்டிய அவசியம் ஏற்படாது என்றால் ? சரியல்ல. தாவா கடனுறுதிசீட்டு நீல நிற மையினால் எழுதப்பட்டதா அல்லது கருப்பு நிற மையினால் எழுதப்பட்டுள்ளதா என்றால் ? நீல நிற மையால் எழுதப்பட்டது. எத்தனை பக்கங்களில் எழுதப்பட்டது என்றால் ? ஒரே பக்கத்தில் தான் எழுதப்பட்டது. பிரதிவாதிக்கு கடன் கொடுக்கும் அளவிற்கு நான் வசதி படைத்தவர் அல்ல என்றால் ? சரியல்ல. பிரதிவாதி என்னிடமோ அல்லது மற்ற நபர்களிடமோ கடன் பெறவேண்டிய அவசியம் இல்லை என்றாலும், பிரதிவாதி நல்ல வசதி வாய்ப்புடன் இருந்து வரக்கூடிய நிலையில் என்னிடம் கடன் பெற்றுள்ளதாக சொல்லியுள்ளது வழக்கிற்காக நான் சொல்லியுள்ள பொய் என்றால் ? சரியல்ல.

சாட்சி செல்லத்துரையை நான் நீதிமன்றத்திற்கு சாட்சியம் சொல்ல நான் தான் அழைத்து வந்தேன் என்றால் ? ஆமாம். சாட்சி செல்லத்துரை எனக்கு மிகவும் வேண்டப்பட்டவர் என்றால் ? சரியல்ல. செல்லத்துரை என்பவர் எனக்கு அறிமுகம் இல்லாத நிலையில் அவரை இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க நான் அழைத்து வந்ததாக நான் சொல்லியுள்ள நிலையில் எனக்கு இவ்வழக்கு சாட்சியான செல்லத்துரை என்பவர் நண்பர் என்பதால் தான் சாட்சியம் அளிக்க அழைத்து வந்துள்ளேன் என்றால் ? பிரதிவாதி என்னிடம் தொகை பெற்ற போது அவர் எனக்கு நண்பர் கிடையாது. அதற்கு பின்னிட்டு எனக்கு பழக்கமாகிவிட்டார். நானும், சாட்சி செல்லத்துரையும் சேர்ந்து வா.சா.ஆ.1 ஆவணத்தை பொய்யாக உற்பத்தி செய்த காரணத்தினால் தான் நான் வா.சா.ஆ–1 என்பவரை சாட்சியாக இவ்வழக்கில் அழைத்து வந்துள்ளேன் என்றால் ? சரியல்ல. நான் இந்த வழக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்கு எந்த வழக்குமூலம் இல்லை என்றால் ? சரியல்ல. நான் செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம் தவறு என்றால் ? சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் ? சரியல்ல.

C JAYAPPRAKASH

Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2026.07.14 15:48:48 +0530

சார்பு நீதிபதி
ஒட்டன்சத்திரம்